பக்கங்கள்:-16

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 15 | புதன்கிழமை | 31.07.2024 | அதிர்வு 364 |
|---|---|---|---|---|---|

## அனைவரும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிப்பர்

### இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை



அரசியலுக்கு முன் நாட்டைப் பற்றி சிந்திக்கும் அனைவரும் இந்த ஜனாதிபதித் தேர் 06▶



### ஆளும் கட்சியைச் சேர்ந்த

# 92 எம்.பிக்கள் ரணிலுக்கு பேராதரவு!

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 92 பேர் நேற்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரின் வெற்றிக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்குவதாக அறிவித்தனர்.

06▶



## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலராக பதில் அரச அதிபர் பணியாற்றுவதை ஏற்கவே முடியாது!

### தேர்தல் ஆணைக்குழுவிடம் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகப் பதில் அரச அதிபர் பணியாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இலங்கையில் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிர்வாக சேவை விசேட தரத்தைச் 06▶



‘சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!’ என்பார்கள். அந்தக் கதையாகி இருக்கின்றது, மொட்டுக் கட்சியின் 92 எம்பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு என்ற ரணில் தரப்பின் நேற்றைய அறிவிப்பு.

நேற்று நடைபெற்றது ஜனாதிபதி ரணில் அரசின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம். அதற்கு வந்த 92 எம்பிக்களை மொட்டுக் கட்சித் தரப்பிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கு மாறிய எம்.பிக்களாகப் படம் காட்ட ரணில் தரப்பும் முயன்றது.

ஆனால், அதனை, அரச 06▶



# இணையத்தளமூடாக வியாபாரப் பதிவுகளை ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

இணையத்தளமூடாக வியாபாரப் பதிவுகளை ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தலைமையில் ஆளுநர் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் எம்.பிரதீபன், ஆளுநரின் உதவிச் செயலாளர், சமுர்த்தி ஆணையாளர் நாயகம் மற்றும் யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான வியாபாரப் பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

காலதாமதமின்றி வியாபாரப் பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதள பதிவு முறையை அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடு எனத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டைத் துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறினார். அத்துடன் பொதுச்சேவைக்கான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதும் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்,

விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும் எனவும், அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.



இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், போக்குவரத்துக்கான பஸ்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகக் கூறினார். அத்துடன் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் அசுவெசும கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு இதன்போது கொண்டு செல்லப்பட்டது. அதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.





# இந்திய நிதியில் தோட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய அமைச்சரவை அனுமதி

இந்திய அரசின் மேலும் 300 மில்லியன் ரூபா உதவியுடன் பெருந்தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களால், இந்த கருத்திட்டத்தின் நன்கொடையை 600 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு இந்திய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஏற்புடைய ஆவணங்களில் கைச்சாத்திடுவதற்காகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

எதிர்வரும் பண்டிகை காலத்தைக் கருத்தில் கொண்டு சந்தையில் நிலையான விலையைப் பேணுவதற்காக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், இலங்கைக்கு இதுவரை 224 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என அமைச்சரவை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 7 வயது சிறுமி காயமடைந்துள்ளார்

கலேவெல – மக்குலுகஸ்வெவ பகுதியில் துப்பாக்கி ஒன்று தவறுதலாக இயங்கியதில் 7 வயதான சிறுமி காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த போது மேற்படி சிறுமி இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளார்.



# காட்டு யனைகளின் கணக்கெடுப்பு; முல்லையில் 18, 19 ஆம் திகதிகளில்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் காட்டு யனைகள் கணக்கெடுப்பு எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் உள்ள யானைகளின் எண்ணிக்கையைக் கண்டறியும் நோக்கில் வன ஜீவராசிகள் திணைக்களம் கணக்கெடுப்பை ஆரம்பித்துள்ளது. இந்த வகையில் இலங்கையில் மிக அதிக காடு காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர் வரும் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் இந்தக் கணக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதற்காக வன ஜீவராசகள் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் என பெரும் ஆளணி தயார் படுத்தப்படுகன்றது.

லேசர் குறியீடு மூலம் அடையாளமிடப்பட்டு இந்தக் கணக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைக்காக இலகு ரக சிறிய வாகனங்கள், 13 வாகனங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்காக வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் மாவட்டச் செயலகத்தின் 50 உத்தியோகத்தர்களும் தயார் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் அரசியல் இருப்புக்கு பொது வேட்பாளர் தேவையா?

## கலந்துரையாடலுக்கு வவுனியா பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் அழைப்பு

(கே.வசந்தன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழரின் அரசியல் இருப்புக்குத் தேவையா? என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலுக்கு வவுனியா பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

நேற்று அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சில சிவில் அமைப்புகளும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள சில கட்சிகளும் ஒன்றிணைந்து எடுத்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளரைக் களம் இறக்குவது தொடர்பான நிலைப்பாடு சாத்தியமானதா என்பது தொடர்பில் வவுனியா பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து வவுனியா மக்களினுடைய நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அது தொடர்பிலான கருத்துக்கணிப்பை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களம் இறக்குவது தொடர்பில் செயற்பட்டு வரும் சிவில் அமைப்புகள் சிலவும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் சிலவும் வவுனியா பொது அமைப்புக்களுடன் எவ்விதமான கலந்துரையாடலையும் மேற்கொள்ளாத நிலையில் இவ்விடயம் தொடர்பில் வவுனியா பொது அமைப்புகள் மற்றும்




சிவில் அமைப்புகள் என்ற ரீதியில் ஆக்கபூர்வமான செயல் நிலைப்பாட்டை மக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கோடு தற்காலத்தில் தமிழர்களின் அரசியல் இரும்புக்குத் தமிழ்ப் பொது வேட்பாளரின் தேவை அவசியமானதா என்பது தொடர்பான கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வாடி வீட்டில் இடம்பெறவுள்ளது. எனவே, ஆர்வமுள்ள தமிழ் அரசியல் பரப்பில் செயற்பாடு உள்ளவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.” – என்றுள்ளது.



# அரசியல் கூட்டமொன்றில் பங்கேற்ற தாதியர்கள் தொடர்பில் முறைப்பாடு

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் தாதியர்கள் அவர்களது உத்தியோகபூர்வ சீருடையில் பங்கேற்றமை தொடர்பில் பல தரப்பினர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

சட்டத்தரணி தனுக கஹந்தகமகே, கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மாகில் உள்ளிட்ட தரப்பினர் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் தாதியர்கள் பங்கேற்பதற்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க சுகாதார அமைச்சு அனுமதியளித்திருந்தமை தொடர்பான கடிதம் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன சார்பில் கட்டுப்பாட்டாளர் பிரிவின் பணிப்பாளர் எம்.எல்.எம் அன்வர் அலியின் கையொப்பத்துடன் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தாதியர்களுக்கு அன்றைய தினம் சம்பளத்துடன் கூடிய விடுமுறை மற்றும் ரயில் பயணச் சீட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மீண்டும் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, மேல் மாகாணத்தில் 12 ஆயிரத்து 847 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 613 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 453 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 1,781 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 32 ஆயிரத்து 301 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாடாளுமன்ற குழுவில் ஆக 92 எம்பிக் கள்தான் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதர வாக இருக்கின்றார்கள் என்பதை காட்டு வதாக இப்போது வருத்தப்படுத்தப்படுகின் றது. எனவே நாடாளுமன்றத்தில் ரணில் அரசின் அறுதிப் பெரும்பான்மை இழக்கப் பட்டு விட்டது, இப்போது இருப்பது ரணி லின் அரசு - பெரும்பான்மையை இழந்த சிறுபான்மை அரசு என்று - கூச்சலிடும் நிலைமையை ரணில் தரப்பே ஏற்படுத்திக் கொடுத்து விட்டது என்று சுட்டப்படுகின்றது.

புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வ தற்கு 2022 ஜூலையில் நாடாளுமன்றத் தில் நடந்த தெரிவில் 138 எம்பிக்களின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதியானார் ரணில் விக்கிரமசிங்க. இப்போது அதில் கணிசமான எம்பிக்களின் ஆதரவை ரணில் இழந்துவிட்டார் என்பதையும், ரணில் தரப்பு இப்போது போட்ட படம் காட்டி நிற்கின்றது.

\+ + +

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஆக 52 நாள்களே உள்ளன. பிரசார காலம் என்று பார்த்தால் வெறும் 50 நாள்கள்தான். ஏழு வாரங்கள்தான்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் என்ற புது கயிற்றைத் தூக் கிச் சுமக்க வேண்டிய தரப்பினர் இந்த குறுகிய காலத்துக்குள் எப்படிப் பொது வேட்பாளரை இனித் தேடிக் கண்டு பிடித்து களம் இறக்கப் போகின்றார்கள் என்பது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி இருப்பது கண்கூடு.

இதற்கிடையில் பொது வேட்பாளரை களத்தில் நிறுத்துவது என்று கூடிக் கதைத்த கட்சித் தலைவர்களில் இரண்டு கட்சித் தலைவர்கள் யதார்த்தப் புறநிலை யைப் புரிந்து கொண்டு, தங்களுக்குள் பேசியிருக்கின்றனர் எனத் தெரிகிறது. முதல் வாக்கைப் பொது வேட்பாளருக்கும், அடுத்த வாக்கை ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு ஆதரவாகவும் அளிக் கும்படி கோருவது குறித்து தங்களுக்குள் அவர்கள் கலந்துரையாடி இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

தவிரவும் பொது வேட்பாளருக்கான தெரிவில் சம்பந்தப்பட்ட சில கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் சங்கடம் இன்றி, கூட்டு ஒன்றை அமைத்துக் கொண்டு, தனியாகப் பேச்சு நடத்தி வரு கின்றனர் என்றும் தெரிகின்றது.

இது, பொது வேட்பாளர் கோரிக் கையை முன்வைத்துப் போராடும் கட்சித் தலைவர்கள் மத்தியில் குழப்பங்களையும் சந்தேக பார்வைகளையும் நம்பிக்கையீ னங்களையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது.

## யாழ்ப்பாணம் மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்ந்த 7 அதிகாரிகள் உள்ளபோதும் ஒரு நிரந்தர அரச அதிபர் நியமிக்கப்படாது அரசியல் செல்வாக்கின் மூலம் நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அதிகாரி பதில் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அரசியல் நியமனம் என்பதால் தேர்தலின்போதும் அரசியல் செல்வாக்குச் செலுத்தக்கூடும் என்பதோடு மாவட்டத் தில் உள்ள விசேட தர அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் நெருக்கடி நிலையை உண்டு பண்ணும்.

இவற்றைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்டத்துக்கான தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக நிர்வாக சேவை விசேட தரத் தைச் சேர்ந்த ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

## 92 எம்.பிக்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீண்டும் அராஜகமற்ற, வரிசை யுகம் இல்லாத சமூக, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார அபிவிருத்தியுடன் கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க மட்டுமே என்றும், அதனால் தனிப் பட்ட அரசியல் நோக்கங்களை விடுத்து நாட்டுக்காக தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தாம் கஷ்டப்பட்டு கட்டியெழுப்பிய கட் சியைப் பற்றி சிந்திக்காமல் ஒரு சிலரது கோரிக்கைக்கு அமைவாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிராகரித்துவிட்டு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்து வப்படுத்தி இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதாகச்சுட்டிக்காட்டியநாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி பிரதிநிதிகள் உட்பட கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்கள் இந்தத் தீர்மானம் சரியானது என்பதை உறுதி செய்துள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

நாட்டின்பொருளாதாரம்,சட்டம்ஒழுங்கு சீர்குலைந்து நாடாளுமன்ற உறுப்பினர் கள் வீதியில் கொல்லப்பட்ட போது இரண்டு வருடங்களில் நாட்டை ஸ்திரப்படுத்துவ தற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாடுபட்டதையும் அவர்கள் நினைவு படுத்தினர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2022ஆம் ஆண்டு நாடு பாரிய அரசியல் மற்றும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்த போது, நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப் பைத் தான் தனியாக ஏற்கவில்லை என் றும், நாட்டை நேசித்த திறமையான குழு வினர் தன்னுடன் இணைந்துகொண்ட னர் என்றும் தெரிவித்தார்.

அவர்கள் தமது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றினர் என்றும், அந்தக் குழு வினராலேயே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்றும் ஜனாதி பதி சுட்டிக்காட்டினார்.

நாட்டைக் கட்டியெழுப்ப தமக்கு ஆதரவ ளிக்குமாறு தான் முதலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரி யதையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அன்று எடுத்த சரியான தீர்மானத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர்களான அலி சப்ரி, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எஸ்.பி. திஸாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன, அனுரபிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, டி.பி. ஹேரத், மஹிந் தானந்த அளுத்கமகே, பிரேமநாத் சி.தொலவத்த, ஜானக வக்கும்புர, ஜோன் செனவிரத்ன, டக்ளஸ் தேவானந்தா, மதுர விதானகே, ராஜிகா விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரும் இங்கு கருத்துத் தெரி வித்தனர்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் இரா ஜாங்க அமைச்சர் ரோஹன திஸா நாயக்க தெரிவித்தார்.

உலகின் சக்திவாய்ந்த தலைவர்கள் இக்கட்டான காலங்களில் உருவாகுவதா கச் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், கடந்த காலத்தில் நிலவிய கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் வலுவான தலைமைத் துவத்தின் பண்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தி னார் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸா நாயக்க,

"2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால்மக்கள்அனைவரும்பாதிக் கப்பட்டனர். அந்தப் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற எந்தத் தலைவரும் முன்வரவில்லை. ஆனால், தற்போதைய ஜனாதிபதி ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனத்துடன் மக்களுக்காக முன்வந் தார்.

அதன்போது, எடுக்கப்பட்ட நடவடிக் கைகளால், நாட்டின் பொருளாதாரம் தற் போது மீண்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கர வாதப் போரிலிருந்து நாட்டைக் காப்பாற் றினார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொருளாதாரப் போரிலிருந்து காப்பாற்றினார்.

எனவே, இத்தருணத்தில் அரசியலை விட நாட்டைப் பற்றி சிந்திக்கும் எவரும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பார்கள். அதன்படி இம்முறை மாத்தளை மக்களின் ஆசியுடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது ஆதரவை வழங்கி எனது கட மையை நிறைவேற்ற தீர்மானித்துள் ளேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கிராம மட்டத்தில் உருவாகிய கட்சி என்பதைக் கூற வேண்டும். நான் மாத்தளை மாவட் டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படு கின்றேன். மக்கள் என்னுடன் இருக்கும் வரை நான் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவளிப்பேன். இல்லா விட்டால் வீட்டுக்குச் செல்வேன்.

உலகின் கடினமான காலங்களில் சக்திவாய்ந்த தலைவர்கள் உருவாகுகின் றார்கள். கடந்த பொருளாதார நெருக்கடி யிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவ தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலுவான தலைமைத்துவப் பண்பு களை வெளிப்படுத்தினார். அவருடைய சரியான பொருளாதார முகாமைத்துவக் கொள்கையால்தான் இன்று நமது நாடு இந்த இடத்தை அடைந்துள்ளது.

1945 ஆம் ஆண்டு இரண்டாம் உல கப் போரில் வெற்றி பெற்ற பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், பின்னர் நடை பெற்ற பிரித்தானியப் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தார். போரின்போது நாட்டைப் பொருளாதார ரீதியாக பலப்படுத் திய கிளமென்ட் அட்லி அங்கு வெற்றி பெற்று பிரதமரானார். சரித்திரம் மீண்டும் எழுதப்படுவது போன்று இலங்கையி லும் நடைபெறுகின்றது

07



# வவுனியாவிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட பதினைந்து மாடுகளுடன் மூன்று பேர் கைது

## விசேட அதிரடிப் படையினர் அதிரடி நடவடிக்கை

(கே.வசந்தன்)

வவுனியா, நெடுங்கேணி பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி கப் ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட 15 மாடுகளுடன் மூவர் வவுனியா விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமான வாகனத்தை வவுனியா ஹொரவப்பொத்தான வீதி, 6 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் சோதனை நடத்தினர்.

இதன்போது குறித்த வாகனத்தில் முறையான அனுமதி ஏதும் இன்றி கொண்டு செல்லப்பட்ட 15 மாடுகளை மீட்டுள்ளமையுடன், வாகனத்தில் பயணம் செய்த காட்டகஸ்கிரிய பகுதியை சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து, வாகனத்தையும் மீட்டுள்ளனர்.




கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளமையுடன், அவர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வவுனியாவில் வழக்கு!

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நடவடிக்கை

(கே.வசந்தன்)

வவுனியாவில் 60 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது சரியான தராசை பயன்படுத்தாமை, விற்பனைக்குப் பொருளை மறுத்தமை, விலை அழிக்கப்பட்டிருந்தமை, விலை குறிக்கப்படாமை, காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை, தகவல் குறிக்கப்படாமை, உத்தவாதம் வழங்காமை போன்றன தொடர்பில் 54 வழக்குகளும், பேக்கரி தொடர்பில் 6 வழக்குகளுமாக 60 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரம், கோவில்குளம், வைரவபுளியங்குளம், குருமன்காடு, பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளுக்குளம்



உள்ளிட்ட பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 60 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அனைவரும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதைக் கூற வேண்டும்.

மேலும் விளையாட்டுத் துறை தொடர்பில் குறிப்பிட வேண்டும். கடந்த இரண்டு வருடங்களில் தற்போதைய அரசு இலங்கையின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்காகப் பல பணிகளைச் செய்துள்ளது. விளையாட்டுக்காக ஒம்புட்ஸ்மன் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வருட ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்காக நாட்டிலிருந்து சென்றிருக்கும் விளையாட்டு வீரர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள இரண்டு ஹொக்கி மைதானங்களும் புனரமைக்கப்பட்டு அடுத்த மாதம் 15ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முழுமையான விளையாட்டுத்துறையை மேம்படுத்த நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்த ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டுவின் அறுவடை

சில பிழையான - தவறான தரப்புகளுடன் கூட்டுச் சேர்வது - அணிவகுப்பது - ஆரம்பத்தில் இலகுவான காரியமாக இருக்கும். ஆனால் கூட்டை முடிப்பது - முறிப்பது - பிரிந்து செல்வது - சிக்கலானதாக, நெருக்கடி மிகுந்த விளைவுகளை தருவதாக அமையும்.

அத்தகைய பாடத்தைத்தான் இப்போது பொது ஜன பெரமுன அனுபவிக்கின்றது. அவஸ்தைப் படுகின்றது.

நாடாளுமன்றத்தில் ஒற்றை உறுப்பினராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவைத் தேடிப்பிடித்து ஜனாதிபதியாக்கியமையின் விளைவை - வினையை - இப்போது மொட்டுக் கட்சி எதிர்கொள்கின்றது எனலாம்.

'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிய கதை' குறித்து கேள்விப்பட்டிருக்கின்றோம். அந்தக் கதையாகியிருக்கின்றது தமது கட்சியின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கிய மொட்டுக் கட்சியின் நிலைமை.

அறகலய போராட்ட நெருக்கடிக்கு - அந்த இக்கட்டுச் சிக்கலுக்கு - முகம் கொடுத்து, எதிர்கொண்டு நிமிர வேண்டிய கட்டாயம் அச்சமயத்தில் மொட்டுக் கட்சியினருக்கு இருந்தது. அதற்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடம் கொடுத்த மொட்டுக் கட்சி, இப்போது ஏன் அவருக்கு இடமளித்தோம் என்று கவலைப்படும் மோசநிலைக்குச் சென்றிருக்கின்றது.

மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவில் 92 எம்.பிக்கள் வரையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து விட்டார்கள் என்ற சாரப்பட ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்ட அறிவிப்பு 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டி விட்டது' என்ற நிலைமையைத்தான் எடுத்தியம்பி நிற்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு அளிப்பதில்லை என்ற முடிவை நேற்று முன்தினம் மொட்டுக் கட்சியின் அரசியல்குழு தீர்மானம் செய்த போதே மொட்டுக் கட்சிக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவின் நரி தந்திரம் - சதி வேலைத் திட்டம் - செயல்படத் தொடங்கி விடும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

அப்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தருவதில்லை என்று முடிவை எடுத்த போதிலும், ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை ரணிலின் அரசைக் கவிழ்ப்பதில்லை, அது தொடர அனுமதிப்பது என்ற தீர்மானத்தையும் மொட்டுக் கட்சி எடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சாதகமான சூழ்நிலையை - அரச நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தை - இன்று மொட்டுக் கட்சிக்கு எதிரான படமாகக் காட்ட ரணில் தரப்பு முயற்சிக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

மொட்டுக்கட்சியின் எத்தனை எம்.பிக்கள் ரணில் பக்கம் பாய்ந்தார்கள் அல்லது சாய்ந்தார்கள் என்பது பரபரப்பு செய்தியாக பேசப்பட்டாலும், அதுவல்ல விடயம்.

அந்த எம்.பிக்கள் எவ்வளவு மக்கள் செல்வாக்கைத் தங்களுக்குத் தக்க வைத்திருக்கின்றார்கள், அந்த எம்.பிக்களை வளைத்துத் தம்பக்கம் போட்டமையால், அவர்கள் ஊடாக ரணில் தரப்பு ஈட்டியுள்ள புதிய மக்கள் செல்வாக்கு யாது என்பவைதான் இப்போது விடயங்களாகும்.

ராஜபக்ஷக்களை ஒதுக்கி விட்டு, மொட்டுக் கட்சியை வளைத்து பிடிப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மக்கள் செல்வாக்கை ஈட்ட முடியுமா என்பதே கேள்விக்குறிதான்.

ஆயினும், ரணில் விக்கிரமசிங்க என்ற ஒரு தனி மனிதரை அரசியல் வேறுபாடுகள் துறந்து, ஜனாதிபதியாக்கியமையின் விளைவை - பெறுபேறை - தமது பொதுஜன பெரமுனவின் பெரும் பாதிப்பாக மொட்டுக் கட்சியினர் உணர்ந்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பது வாஸ்தவம்தான்.

அது ஒரு வகையில் விதைத்த வினைக்கான அறுவடையே. விளச்சலே!

# வருடாந்த இடமாற்றத்துக்கு ஆட்சேபனை இல்லையாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒன்றிணைந்த சேவையாளர் சுற்று நிரூபத்தினூடாக 2025 ஆம் ஆண்டுக்கான அதிகாரிகளின் வருடாந்த இடமாற்ற அறிவிப்பு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த சுற்று நிரூபம் நடைமுறைப்படுத்தப்படுவதால் ஜனாதிபதித் தேர்தலுக்கு அது எந்தவித தாக்கத்தையும் செலுத்தாது என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.




# அவசரமாக ஒன்றுகூடியது தேர்தல்கள் ஆணைக்குழு

தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அவசரமாக கூடியது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எட்டும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரசாங்கத்தினால் அபிவிருத்தி மற்றும் நலன்புரி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அஸ்வெசும, காணி உறுதிப்பத்திரம் வழங்கல், ஜனாதிபதி புலமைப்பரிசில் மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அரச சொத்துக்களைப் பயன்படுத்துகின்றமை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்படவிருந்தது.

# கெஹலியவின் மனு மீதான தீர்ப்பு ஓக. 9ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு விசாரணை நிறைவடையும் வரையில் தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு தொடர்பான தீர்ப்பை ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வெளியிடவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சமர்ப்பித்த கோரிக்கை மீதான உத்தரவும் அன்றைய தினம் அறிவிக்கப்படும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த உத்தரவு ஓகஸ்ட் முதலாம் திகதி வெளியிடப்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டது.



# தம்மிக்க பெரேராவே ஜனாதிபதி வேட்பாளர்



## உதயங்க வீரதுங்க கூறுகின்றார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலதிபருமான தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அந்தக் கட்சியின் உறுப்பினரும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தின் போது, மொட்டுச் சின்னத்தில் பிரத்தியேக வேட்பாளரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வேட்பாளரை இந்த வாரம் அறிவிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும் அந்த கட்சி தம்மிக்க பெரேராவையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவிருப்பதாக உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.



# ஏற்றுமதி வருமானம் நாட்டில் அதிகரிப்பு

தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா மற்றும் மிளகு ஆகிய பெருந்தோட்ட பயிர் ஏற்றுமதி மூலம் முதல் 4 மாதங்களில் 1,118 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அந்த எண்ணிக்கை 234 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் மேற்படி பயிர் ஏற்றுமதி மூலம் 884 மில்லியன் டொலர் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.





# மைத்திரிக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு எதிரான தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட தரப்பினரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்குவதனை தடுக்கும் வகையில் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான தடையுத்தரவை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் நிலையங்களில் தேர்தலுக்கான பிரிவுகள்

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய பாதுகாப்பு செயற்பாடுகளை ஒழுங்குசெய்யும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு கடமைகளில் அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் பொலிஸ் பிராந்திய மட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செயற்பாட்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தற்போது தேர்தல் பிரிவு நிறுவப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல்: மாநில தேர்தல் ஆணையம் ஏற்பாடு



தமிழகத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் விதமாக, தலைமை தேர்தல் அதிகாரியிடம் வாக்காளர் பட்டியலை மாநில தேர்தல் ஆணையம் கோரியுள்ளது.

இதுகுறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு, மாநில தேர்தல் ஆணைய செயலர் கே.பாலசுப்பிரமணியன் எழுதியுள்ள கடிதத்தில்,

“தமிழகத்தில் உள்ள உள்ளாட்சிகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல்களை விரைவில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நடத்த உள்ளது.

தற்போதுள்ள சட்டப்பேரவைவாக்காளர் பட்டியல் அடிப்படையில், உள்ளாட்சிகளுக்கான வாக்காளர் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் அல்லது தற்செயலாக தேவைப்படும் காலங்களுக்கு தயாரிக்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி, ஆண்டுதோறும் ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜுலை 1 மற்றும் ஒக்டோபர் 1 ஆம் திகதிகளில் தகுதியானவர்கள் வாக்காளர் பட்டியலில் தற்போது சேர்க்கப்பட்டு வருகின்றனர். அதற்கேற்ப மக்கள் பிரதிநிதிகள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், கடந்தமார்ச் மாதம் 27 ஆம் திகதி மக்களவை தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட சட்டப்பேரவை தொகுதி வாரியானவாக்காளர் பட்டியல் அடிப்படையில் மாநில தேர்தல் ஆணையம் தற்போது உள்ளாட்சிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை தயாரிக்க வேண்டியுள்ளது. எனவே, கடந்த மார்ச் 28 ஆம் திகதி சட்டப்பேரவை தொகுதி வாரியாக வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின் அச்சிடப்பட்ட பிரதிகள் மற்றும் மென் பிரதிகளை வழங்கும்படி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக உள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு தாங்கள் தகுந்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

தரவுகள் அனைத்தும் உள்ளாட்சித் தேர்தலுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். மாநில தேர்தல் ஆணையம், உரிய கள ஆய்வுகள் நடத்தி சரிபார்த்து தனது சொந்த தரவுகளை உருவாக்கும். தேர்தல் ஆணையம் அளிக்கும் தரவுகளை வேறு யாருக்கும் பகிரமாட்டோம். தொகுதி வாரியாக தற்போதுள்ள புதிய வாக்காளர் பட்டியல் தரவுகளை அளிக்க அறிவுறுத்த வேண்டும். உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு தகுந்த நேரத்தில் வெளியாகும்.” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் புதிதாக பிரிக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்கள் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 2019 டிசம்பரில் தேர்தல் நடைபெற்றது. இந்த ஊரக உள்ளாட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவடைகிறது. இதையடுத்து, பதவி காலியாகும் ஊரக உள்ளாட்சிகளுக்கு தேர்தல் நடத்த மாநில தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது.

இதுதவிர, 2021 ஆம் ஆண்டு தி.மு.க, ஆட்சி பொறுப்பேற்றதும், நகர்ப்புற உள்ளாட்சிகள் மற்றும் தேர்தல் நடத்தாத 9 மாவட்ட ஊரக உள்ளாட்சிகளுக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டது. இந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் 2026 ஆம் ஆண்டு முடிவடைகிறது. 2026ம் இல் பேரவை தேர்தலும்வருவதால், முன்னதாகவே அதாவது இந்தாண்டே அனைத்து உள்ளாட்சிகளுக்கும் தேர்தல் நடத்த அரசு யோசித்து வருகிறது.

# இந்திய - சீன எல்லை பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட வேண்டாம்

## எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு



இந்திய – சீன எல்லை பிரச்சினையில் எந்த நாடும் தலையிடுவதை விரும்பவில்லை என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார் .


அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகள் இணைந்து ‘குவாட்’ என்ற பெயரில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி உள்ளன. இந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சிக்கு நடுவே அவர் செய்தியாளர்களிடம் உரையாற்றுகையில்,

“கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று பரவிய காலத்தில், சீன நாட்டு இராணுவ வீரர்கள் ஏராளமானோர் இந்தியாவுடனான லடாக் எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டனர். அத்து மீறி இந்தியபகுதிக்குள் ஊடுருவ முயன்ற சீனவீரர்களுக்கும் இந்திய வீரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் இருதரப்பிலும் உயிரிழப்பு ஏற்பட்டது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. பக்கத்து நாடான சீனாவுடன் சுமுகமான உறவை பராமரிக்க இந்தியா விரும்புகிறது. ஆனால், இருதரப்பு ஒப்பந்தம் மற்றும் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டை மதித்து சீனா நடந்து கொண்டால்தான் இது சாத்தியம்.

இந்தியாவும் சீனாவும் உலகின் பெரிய நாடுகளாக உள்ளன. இந்த நிலையில், இவ்விரு நாடுகளுக்கிடையிலான உறவில் ஏற்பட்டுள்ள விரிசல் உலக நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாக, இந்தியா–சீனா இடையிலான பிரச்சினையில் தலையிட உலக நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. ஆனால், இரு நாடுகளுக்கிடையிலான இந்த விவகாரத்தில் உலக நாடுகள் தலையிடுவதை விரும்பவில்லை.”– என்றார்.

# மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கனமழை:

# குற்றாலம் அருவிகளில் பெருக்கெடுத்த வெள்ளம்



மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த பலத்த மழையால் குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது,

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நாலுமுக்கு பகுதியில் 96 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

மலைப்பகுதியில் பெய்த மழையால் குற்றாலம் பிரதான அருவியில் நேற்று முன்தினம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில், மாலையில் ஐந்தருவியிலும், அதைத் தொடர்ந்து பழைய குற்றாலம் அருவியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தொடர் மழையால் அனைத்து அருவிகளிலும் வெள்ளப் பெருக்கு நீடித்துள்ளது. இதனால், அருவிகளில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது.



# பிரித்தானியாவின் சவுத்போர்ட் நகரில் கத்திக்குத்து தாக்குதல்; சிறுவர்கள் பலி







பிரித்தானியாவின் சவுத்போர்ட் நகர கத்திக்குத்து தாக்குதலில் 2 சிறுவர்கள் பலியாகியுள்ளனர். 9 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் 6 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் சவுத்போர்ட் நகரில் செயல்பட்டு வரும் நடன பாடசாலை ஒன்றிற்குள் புகுந்த 17 வயது சிறுவன், அங்கிருந்த சிறுவர்களை கத்தியால் தாக்கியுள்ளார்.

பிரித்தானியாவின் கடலோர பகுதியில் அமைந்துள்ள சவுத்போர்ட் நகர ஹார்ட் ஸ்ட்ரீட் என்ற இடத்தில், சிறுவர்களுக்கான நடன பயிற்சிக் கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரியில் நூற்றுக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இந்த நிலையில் டெய்லர் ஸ்விஃப்ட்-கருப்பொருள் நடன நிகழ்வின் போது கல்லூரிக்குள் புகுந்த சிறுவனால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கத்திக்குத்து தாக்குதல் தொடர்பாக, வேல்ஸின் கார்டிஃப் நகரில் பிறந்து லங்காஷையரில் உள்ள பேங்க்ஸ் கிராமத்தில் வசிக்கும் 17-வயது சிறுவனை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. பயங்கரவாத தாக்குதலாக இதை கருதவில்லை என முதல்கட்ட விசாரணையில் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கத்திக்குத்து தாக்குதலில் சிறுவர்கள் பலியான சம்பவத்திற்கு பிரித்தானிய மன்னரும், ராணியும், பிரதமரும் ஆழ்ந்த இரங்கலையும், அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளனர்.

# 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள்; பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதலிடம்



2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளின் அடிப்படையில் 6 தங்கங்களை வென்ற ஜப்பான் பதக்கப் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது.

ஜப்பான்இதுவரை6தங்கம்,2வெள்ளி, 4 வெண்கலம் அடங்கலாக 12 பதக்கங்களை வென்றுள்ளது.

இந்த பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ள பிரான்ஸ் இதுவரை 5 தங்கம், 8 வெள்ளி, 3 வெண்கலம் அடங்கலாக 16 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

சீனா 5 தங்கம், 5 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்று மூன்றாமிடத்தில் உள்ளது.

நான்காம் இடத்தில் உள்ள அவுஸ்திரேலியா 5 தங்கம், 4 வெள்ளி அடங்கலாக 9 பதக்கங்களை வென்றுள்ளது.

இதுதவிர தென்கொரியா 5ஆம் இடத்திலும், அமெரிக்கா 6 ஆம் இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 31.07.2024




மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படி பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமாத மாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந் தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை.இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம். இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத் தட்டுப்பாடு காணப்படும். அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.தொண்டை சம்பந்த மான எரிச்சல் காணப்படும்.




இன்று பயணங்கள் ஏற்படலாம்.இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்பட லாம்.

பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்படும். ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியா னம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் கையாண் டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம். இன்று சிறப்பான நாளாக அமையாது.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப் படாது. அசௌகரியங்கள் மற்றும் செலவுகள் காணப் படும்.




இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும் இன்று கிடைக்கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரி மாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌகரிய மாக இருக்கும். நீங்கள் நிதி விடயத்தில் சுதந்திரமாக விரும்பியதை செய்ய இயலும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள்தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள்இன்று பயணங்கள் மேற் கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டி யிருக்கும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. பணிச் சுமை அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் தந்தையாருக்கு சுவாசப் பிரச்சினை காணப்படும்.




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள் செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.அது உங்க ளுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும். விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். செரி மானக் கோளாறுகள் காணப்படும்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இய லாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம். நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் மருத்துவ செலவிற் காக நீங்கள் செலவு செய்ய நேரும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக் கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்தி கரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர் கள்.காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.07.2024




இன்று முழுவதும் வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். நல்ல முடிவு களை எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும்.நீங்கள் கூடுதலான பணிகளை ஆற்ற கடமைப் படுவீர்கள்.

இன்று திருமணம் பற்றிய முடிவு எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளி வைக்கவும். இன்று உங்கள் பிரியமானவருடன் பேசுவதற்கு உகந்த நாள் கிடையாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்க ளிடம் உள்ள பணத்தைக் கொண்டு அதை சமாளிப் பதை கடினமாக உணர்வீர்கள்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் கவலைகள் அதி கரிக்காமல் இருக்க தேவையற்ற எண் ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும். அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். கேள்விப் படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உரையாடும் போது கவனத் துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது.பணம் கையாள்வதில் சில சிக்கல்களை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம்சிறப்பாக இருக்காது.




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்தி சாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம்.

பணிசார்ந்த பயணங்கள் இன்று சாத்தியம்.உங்கள் சகபணியாளர்களிடம் நல்ல உறவு முறை பராமரிப்பது அவசியம்.உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பரா மரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பண விடயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள். நிதி சம்பந்தமான முடிவு களை அடுத்த நாளிற்கு தள்ளிப் போடுங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இன்று உறுதி யும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சக பணியாளர்களிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும்.இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப் படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park







# யாழ்ப்பாணத்தில் Blue Ocean, Tilko கூட்டு முயற்சியில் Yarl Royal Palace ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பு



இலங்கையின் தலைநகருக்கு இணையாக, வடபகுதியில் அபிவிருத்தி திட்டங்கள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்து பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வரும் முன்னணி நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் பலரும் முன்னின்று செயற்படுகின்றனர்.

இவ்வாறான நிலையிலேயே, யாழ்ப்பாணத்தில் Blue Ocean மற்றும் Tilko நிறுவன தலைவர்களின் கூட்டு முயற்சியில் Yarl Royal Palace என்ற ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

புதிய பரிமாண வளர்ச்சி, தொழிநுட்பங்களை கொண்டு இந்த அடுக்குமாடி குடியிருப்பு அமையப்பெறவுள்ளது.

இந்த முயற்சியின் மூலம், வெளிநாட்டிலிருந்து மேலும் பல முதலீட்டாளர்களை யாழ்ப்பாணத்திற்கு ஈர்ப்பது தமது பிரதான நோக்கம் என்று Tilko மற்றும் Blue Ocean நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த திட்டம் வெற்றியடைவதன் மூலம், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கான சிறந்த இடமாக யாழ்ப்பாணத்தை எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும்.

Blue Ocean நிறுவனமானது, இலங்கையில் பல ஆண்டுகளாக நெறிமுறைகளில் உறுதியான மற்றும் சமூகப் பொறுப்புள்ள நிறுவனங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. Blue Ocean குழுமம், நன்கு சமநிலையான திட்ட அமைப்புடன் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமாக தன்னை அடையாளப்படுத்தியுள்ளது.

பல தசாப்தங்களாக, இந்நிறுவனம் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெரிய வாடிக்கையாளர் தளத்துடன் ரியல் எஸ்டேட், கட்டுமானம் மற்றும் பொறியியல் துறைகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.



அதே நேரத்தில், இந்த நிறுவனம் வடிவமைப்பு, கட்டுமானம், திட்ட மேலாண்மை ஆகியவற்றிலும், மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நிலையான சொத்து முதலீட்டு தீர்வுகளை வழங்குவதிலும், பல்வேறு தர சான்றிதழ்களை பெற்றுள்ளது.

அதன் அதிகாரத்தின் கீழ், பன்முக அமைப்பு பல துறைகளில் இயங்கும் பல வணிகங்களை கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் தனது வெற்றிக்கு தகுதியான, அனுபவம் வாய்ந்த மற்றும் திறமையான நிபுணர்களின் குழுவைக் கொண்டுள்ளது. இது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் விரிவான வெளிப்பாட்டைக் கொண்டுள்ளது.

தொழில்துறையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும் வகையில், தனது புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான செயல்முறைகளை மேலும் மேம்படுத்துவதற்கு தைரியமான நடவடிக்கைகளை எடுக்கிறார்.

இதற்கிடையில், வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக பல்வேறு கையகப்படுத்தல், இணைப்புகள் மற்றும் மூலோபாய கூட்டாண்மைகள் மீது கவனம் செலுத்துகிறது.

இந்நிறுவனம் தொழில்சார் தலைவர்களை உருவாக்குவதற்கும், இலங்கையின் நிர்மாணத் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிப்பதற்கும் மையமாகக் கொண்டுள்ளது.

துமிலன் சிவராஜா அவர்களால், தோற்றுவிக்கப்பட்ட Blue Ocean Group நிறுவனமானது, பல சவால்களையும் நெருக்கடிகளையும் கடந்து தற்போது தொழில்துறையில் ஒரு முன்னோடியாக திகழ்ந்து வருகிறது.

இந்நிறுவனம் கடந்த தசாப்தத்தில் தலைநகரான கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு திட்டங்களை உருவாக்கியதுடன், மலையகம் நோக்கியும் விரிவடைந்து வருகிறது.